# தூய லூர்து அன்னை ஆலயம்


50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg


| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **15 டிசம்பர் 2019** | **திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு** | **முதல் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

இன்று இயேசுவின் வருகைக்காக நம்மையே தயாரிக்கும் திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு - மகிழ்ச்சியின் ஞாயிறு. இறைவனின் ஆசீரை நாடி அவரின் இல்லம் வந்துள்ள இறைமக்களே! இன்றைய திருப்பலிக் கொண்டாடத்தில் பங்கேற்க உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

எசாயா நூலிருந்த எடுக்கப்பட்டுள்ள முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா அகமகிழ்ந்து பூரித்துக் கூறுவதாவது: பாழ்நிலங்கள் புத்துயிர் பெற்றுப் பூத்துக் குலுங்கும். ஆண்டவரின் மாட்சியையும் நம் கடவுளின் பெருமையையும் காண்பார்கள். மக்கள் அனைவரும் நலமும் வளமான வாழ்வும் பெற்றுப் பெரும் மகிழ்ச்சியில் சீயோனுக்கு வருவார்கள். துன்பமும் துயரமும் பறந்தோடும் என்றார்.

காலம் கனியும் வரை பொறுமையோடு காத்திருங்கள். தண்டனைத்தீர்ப்புக்கு ஆளாகாதவாறு உங்களைக் காத்துகொள்ளுங்கள். நிலைவாழ்வைக் காத்துக்கொள்ள நம்பிக்கையோடு பயணியுங்கள் என்று திருத்தூதர் யாக்கோபு நமக்கு அறிவுரை வழங்குகிறார்.

இயேசுவின் முன்னோடியான திருமுழுக்கு யோவான் மெசியாவைக் கண்டு கொண்டதின் மகிழ்ச்சியில், அதை தம் சீடர்கள் உறுதிசெய்ய அனுப்பி வைக்கின்றார். இறைவாக்கினரை விட மேலானவர் என்றும் மனிதராய் பிறந்தவர்களில் மிகப் பெரியவர் என்றும் தனக்கு முன்னோடியாய் வந்தவருக்கு பெருமை சூட்டுகின்றார் இயேசு. ஆம் அன்பர்களே யோவானைப் போல் மெசியாவைக் கண்டுணர்ந்து, கரடுமுரடான பாதையை வெற்றிகரமாகக் கடந்து அவர்தரும் நிலைவாழ்வை மகிழ்ச்சியோடு நோக்கிப் பயணிக்க அவரின் உடனிருப்பை தேடி, வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம். தேடுவோம். நம் தேடலும், நாம் தேடுபவரும் மெசியாவானால் மகிழ்ச்சியே!

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்காக **இதுவரை S$ 4.3 மில்லியன்** சேர்க்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மனமுவந்து நன்கொடையளித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்! நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்குத் தேவையான முழுத் தொகையான **S$ 6.2 மில்லியனை** அடைவதற்கு தொடர்ந்து உங்கள் தாராள மனதையும், செபங்களையும் வேண்டி நிற்கின்றோம்.



## திருவருகைக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், திருவருகைக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன் பெறவும்.

ONE
OFFICE FOR THE NEW
EVANGELISATION

## திருவருகைக்கால ஒப்புரவு அருட்சாதனம் வழங்குதல்

### தூய லூர்து அன்னை ஆலயம்



இன்று (**15-12-2019**): காலை **8:45** மற்றும் மாலை **5:30** மணி **(தமிழ்)**

செவ்வாய் **(17-12-2019):** இரவு **8:00** மணி **(ஆங்கிலம்)**

பாவமன்னிப்பு திருவருட்சாதனத்தைப் பெற்று
கிறிஸ்துவின் பிறப்பிற்காக நம் ஆன்மாவைத் தயாரிப்போம்.

---




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

### 22-12-2019 ஞாயிறு மதியம் 2:30 மணி

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

---

## GIFT திட்டத்திற்காக இரண்டாம் காணிக்கை

இவ்வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை, நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். இக்காணிக்கையானது, நம் உயர்மறைமாவட்டத்தில் செயற்படும் பல்வேறு அமைப்புக்களுக்காகவும், கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். உங்கள் தாரள காணிக்கைக்கு மிக்க நன்றி!

---

## கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட திருப்பலி நேரங்கள்



**24-12-2019, செவ்வாய்:**
மதியம் **12:30** மணிக்கு திருப்பலி (ஆங்கிலம்)
இரவு **8** மணிக்கு ஆங்கிலத்தில் கிறிஸ்மஸ் பாடல்கள், இரவு **9** மணிக்குத் திருப்பலி (ஆங்கிலம்)
இரவு **11** மணிக்கு தமிழில் கிறிஸ்மஸ் பாடல்கள், இரவு **11:30** மணிக்குத் திருப்பலி (தமிழ்)

**25-12-2019, புதன், கிறிஸ்மஸ் தினம்:**
காலை **7:30, 11:30** மற்றும் மதியம் **1** மணி (ஆங்கிலம்), காலை **9:15** மணி (தமிழ்)



**31-12-2019, செவ்வாய்:** மதியம் **12:30** மணி (ஆங்கிலம்)

**31-12-2019, செவ்வாய், புத்தாண்டு திருப்பலி:**
இரவு **9** மணி திருப்பலி (ஆங்கிலம்)
இரவு **11** மணிக்கு தமிழில் நன்றி ஆராதனை, இரவு **11:30** மணிக்கு திருப்பலி (தமிழ்)




**01-01-2020, புதன், புது வருட தினம்:**
காலை **9** மணிக்கு திருப்பலி (ஆங்கிலம்), காலை **10:30** மணிக்கு திருப்பலி (தமிழ்)

**குறிப்பு:** அனைத்து திருப்பலிகளும் முடிவடைந்ததும், கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட தினத்தில் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் பூட்டப்படும். பொது விடுமுறை தினங்களில் நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | எசாயா 35:1-6,10 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 146: 7, 8, 9 -10 |
| **பதிலுரை:** ஆண்டவரே, எங்களை மீட்க வந்தருளும். | |
| **இரண்டாம் வாசகம்:** | யாக்கோபு 5:7-10 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது; ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தி அறிவிக்க என்னை அனுப்பியுள்ளார். அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | மத்தேயு 11:2-11 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

